கல்குடா கல்வி வலய வளநிலைய பரீட்சை சபை

பயிற்சிப் பரீட்சை க.பொ.த (உ/த)-2019 ஆடி

தரம்-12 தவணை- 03 கிறிஸ்தவம் நேரம்- 3 மணி

சுட்டெண்/பெயர்; …….. புள்ளிகள் ……

பகுதி I

<u>பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக</u>

1. ஐந்நூலின் ஆசிரியரும் விடுதலைப் பயணத்தின் போது பாலை நிலத்தில் தலைமத்துவம் தாங்கி ஆரம்ப நிகழ்வின் முதன்மை வழிகாட்டியுமானவர்

i.ஆபிரகாம் ii.மோசே

iii.ஆரோன் iv.யோசுவா

2 இறைவன், காட்சி கனவு வானதூதர் வழியாக மனிதரோடு உரையாடுகின்றார் அரசரை விட இறைவாக்கினர் முக்கிய இடத்தில் வகிப்பதால் மோசே இறைவாக்கினராவார் பல புதுமைகளை செய்த இறைவாக்கினர் எனக்கூறும் மரபு.

i. யாவே ii. எலோகிம்

iii. இணைச்சட்டம் iv. குரு

3. தாவீதின் பரம்பரையின் கடைசி அரசனும் எரேமியா போன்ற நேர்மையான போதனையாளருக்கு செவிமடுக்காமல் போனதால் நெபுக்கத்நேசரால் கி மு 587 ல் எருசலேம் நகர் அழிக்கப்பட்டது

i. யோசியா ii. யோயாக்கீம்

iii. யோயாக்கீன் iv. செதேக்கியா

4. இறைவன் ஆபிரகாமுடன் செய்துகொண்ட உடன்படிக்கையை யாக்கோபுடன் புதுப்பித்துக்கொண்டதும் யாக்கோபு தம் எதிர்காலம் தொடர்பாக இறைத்திட்டத்தை விளங்கிக்கொண்டதும் பெத்தேலில் ஆகும் இதன் பொருள்

i. இறைவனின் இல்லம் ii. சினகொக்

iii. எருசலேம் iv. ஒன்றுகூடல்

5. பாஸ்கா வழிபாட்டில் இஸ்ரயேல் மக்கள் இறைவனுடன் செய்துகொண்ட உடன்படிக்கையை அடையாளப்படுத்துவது

i. புளிப்பற்ற அப்பத்தின் பயன்பாடு ii. கசப்புக்கீரை

iii. பாஸ்கா செம்மறியை உண்ணல் iv. இரசம் அருந்துதல்

6. மன்னா என்பது இனிமையான சுவையுடையது வெண்ணிறமானவை …….. என்ற மரத்திலிருந்து வடியும் திரவமாகும்

i .அத்தி ii. தேவதாரு

iii.ஒலிவ் iv.தாமரிஸ் மனிபெரா

7. மோசே இறைவனின் வார்த்தையின் படி கோலினால் பாறையின் மேல் அடிக்க அதிலிருந்து தண்ணீர் ஊற்றெடுத்தது இவ்விடங்கள் மாசா மெரிபா என அழைக்கப்பட்டது இந்த எபிரேயச்சொல்லின் பொருள்

i. சோதித்தல் வாதாடுதல் ii.கசப்பு

iii. சோதித்தல் கசப்பு vi. யாவே கசப்பு

www.kedu.lk

8. திருவிவிலியத்தில் எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர்கள்

i .எலியா எலிசா நாத்தான் ii.குல்தா அபியா மீக்கா

iii.எலியா ஆமோஸ் அபியா iv எசாயா நாத்தான் செக்கரியா

9. மெசியா தாவீது அரசர் பரம்பரையில் இருந்து வருவார் இந்த அரசில் நீதி நேர்மை சமத்துவம் நிலவுவதால் அது அமைதியின் அரசாகும் என நாத்தான் .....அரசருக்கு மெசியா பற்றிய இறைவாக்கினை முதற்தடவையாக வெளிப்படுத்தினார்

i .சவுலுக்கு ii.சாலமோனுக்கு

iii.தாவீதுக்கு iv.எரோபோவாமுக்கு

10. நீதி நம்பிக்கையில் நிலைபெறும் மெசியாவின் அரசு அமைதியின் அரசாகும் எனவே மனிதனுக்கும் விலங்குகளுக்குமிடையிலும் மிருகங்களுக்குமிடையிலும் தமக்கிடையிலும் அமைதி ஆட்சி செய்யும் ஓநாய் செம்மறி ஆட்டுடன் வாழும் ..... பால்குடி பிள்ளை பாம்பு புற்றின் மேல் விளையாடும் எனக்கூறும் இறைவாக்கினர்

i எரேமியா ii. எசாயா

iii.ஆமோஸ் iv. ஓசேயா

11. இறைவன் குறிப்பிட்டுள்ள ஒரு நாளில் அனைத்து மக்கள் இனத்தாரோடு புதிய உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்துவதாக கூறிய வார்த்தைகளினால் அவர்களுள் மீட்பு பற்றிய புதிய எதிர்நோக்கை உண்டாக்கிய இறைவாக்கினர்

i. எசாயா ii. எரேமியா

iii.எசேக்கியேல் iv ஆமோஸ்

12. நீதியோடும் நியாயத்தோடும் வாழ்வதாக இறைவனில் நம்பிக்கை வைத்து பாடும் பாடல்

i புகழ்ச்சிப்பாடல் ii.நன்றிப்பாடல்

iii. ஞான பாடல் iv. நம்பிக்கையின் பாடல்

13. இறைத்தூதர்கள் மற்றும் தீய ஆவிகள் பற்றிய நம்பிக்கை இல்லாதவர்கள் மறு பிறவி பற்றிய கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை அழியாத ஆன்மா மற்றும் மரணத்தின் பின்னரான மகிழ்ச்சி பற்றி நம்பிக்கை அற்றவர்கள்

i. பரிசேயர் ii. சதுசேயர்

iii.எஸ்சேனியர் iv.செலஸ்தியர்

14. இயேசுவின் பணி போதனைகளில் முக்கிய தொனிப்பொருளான .....பற்றி சமநோக்கு ஆசிரியர்கள் அனைவரும் தமது நற்செய்தியின் வழியாக முன்வைத்துள்ளனர்

i.,இறையாட்சி ii.உயிர்ப்பு

iii.உவமைகள் iv.சட்டம்

15. மத்தேயு லூக்கா நற்செய்தியின் மூலமாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதும் அப்போஸ்தலர் கைநூல் என ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான நூல்

i.மாற்கு ii.மத்தேயு

iii.யோவான் iv.திருத்தூதர் பணி

16. வறியவர்கள் மீதான சுரண்டல் செல்வம் சேகரித்தல் உலகில் காணப்படும் அநீதி போன்றவற்றை தெளிவு படுத்தியவரும் சமூக அநீதி பொருளாதார வேறுபாடுகளை கடுமையாக எதிர்த்த இறைவாக்கினர்

i.எசாயா ii.ஓசேயா

iii.மீக்கா iv.ஆமோஸ்

www.lkedu.lk

17. உலகையும் அதில் உள்ள அனைத்தையம் படைத்த இறைவன் விண்ணுக்கும் மணணுக்கும் ஆண்டவராக இருக்கின்றார் என்றும் அறியாத தெய்வத்திற்கு என எழுதப்பட்டிருந்த பலிப்பீடமும் பற்றி பவுல் விவாதித்தது

i. கொரிந்து ii. எபேசு

iii. எதேன்ஸ் vi பிரிகியா

18. வாரத்தின் முதல் நாள் அப்பம்பிடுவதற்காக அவர்கள் கூடியிருந்த போது பவுல் நள்ளிரவு வரை அவர்களுக்கு போதித்துக்கொண்டிருந்த போது யுக்திக்கு என்ற இளைஞன் மூன்றாம் மாடியிலிருந்து கீழே விழுந்து இறந்தான் பவுல் அவ் இளைஞனுக்கு மீண்டும் உயிர் கொடுத்தார் இந்நிகழ்வு நடை பெற்றது

i. மிலேத்து ii. கலாத்தியா

iii. பிலிப்பி vi துரோவா

19. யேசுவை அன்பு செய்த சீடன் செபதேயுவின் மகன் யாக்கோபின் சகோதரன் நற்செய்தியை எழுதிய ஆசிரியராகவும் குறிப்பிடப்படுபவர்

i. பேதுரு ii. யாக்கோபு

iii யோவான் vi பவுல்

20 சீடர்களை கிரேக்க சொல்லால் 'மத்தாரெஸ்"என அழைப்பர் இதன் அர்த்தம்

i.இறைவனுக்காக பேசுபவர் ii வேறு ஒருவரிடமிருந்து கற்கின்ற ஒருவர்

iiiஇறைவனுக்கு கீழ்ப்படிபவர் vi தாழ்ச்சியுள்ளவர்

21. யேசுவை காட்டிக்கொடுப்பதற்காக யூதாசுக்கு வழங்கிய வெள்ளியின் விலை 30 இது ..... என அழைக்கப்படுகின்றது

i. இரத்தத்தின் விலை ii. மாசுமறுவற்றவரின் இரத்தம்

iii. மனிதனின் விலை iv இலஞ்சம்

22 தூய ஆவியானவர் பேதுரு பவுல் ஆகிய திருத்தூதர்களின் வாழ்கையின் வி செயலாற்றிய விதமும் புதிய ஏற்பாட்டில் மீட்பு வரலாற்றை வெளிப்படுத்தும் நூலும் லூக்கா நற்செய்தியின் இரண்டாவது பாகமாகவும் காணப்படும் நூல்

i.யோவான் ii.பேதுறு

iii. உரோமையர் iv. திருத்தூதர் பணி

23 கிறிஸ்து கடவுள் வடிவில் இருப்பினும் இறைவனுக்கு இணையாய் இருக்கும் நிலையை தியாகம் செய்து மனித உருவில் தோன்றி சிலுவைச்சாவு வரை கீழ்ப்படிந்ததை பற்றி பவுல் எழுதிய நூல்

i தீத்து ii பிலிப்பியர்

iii 1 கொரிந்தியர் iv. கலாத்தியர்

24 பாவத்தினால் மாசடைந்த எல்லா படைப்புக்களையும் இறைவன் அழிக்க தீர்மானிக்கிறார் நோவாவின் குடும்பத்தையும் அனைத்து விலங்குகளினது பிரதிநிதிகளையும் காப்பாற்றியதன் மூலம் இறைவனின் இரக்கத்தை காணலாம்

i. யாவே மரபு ii. எலோகிம் மரபு

iii இணைச்சட்ட மரபு iv குரு மரபு

25. கன்னி கருவுற்று ஒரு ஆண் மகனை பெற்றெடுப்பாள் இம்மனுவேல் என்ற பெயரை அவனுக்கு வைப்பாள் அதன் பொருள் ஆண்டவர் நம்முடன் என்பதாகும் என கூறிய இறைவாக்கினர்

i எரேமியா ii மீக்கா

iii எசாயா iv யோனா

4x25=100

www.lkedu.lk

பகுதி ii
எல்லா வினாக்களுக்கும் விடை தருக

1. i. விடுதலைப்பயணம் 12 15- 20 ல் புளிப்பற்ற அப்ப விழா பற்றிய கருத்தினை விளக்குக

ii. இஸ்ரயேல் மக்கள் பாஸ்கா உணவை உண்ணும்முறையை தருக

iii. பாலைவன பயணத்தின் போது இஸ்ரயேல் மக்கள் முறுமுறுத்த முக்கிய சந்தர்ப்பங்கள் 4 தருக

iv. உமது வாழ்வில் இறை பராமரிப்பை அனுபவித்த சம்பவம் ஒன்று தருக

2 i இறைவாக்கினர் எனப்படுபவர் யார்

ii இறைவாக்கினரின் பிரதான மூன்று படிப்பினைகளையும் சுருக்கமாக தருக

iii மெசியாவின் நான்கு பண்புகளையும் தருக

iv இறைவாக்கினராக அழைக்கப்பட்ட உமது கடமைகளையும் பொறுப்புக்களையும் தருக

3 i நற்செய்தி என்றால் என்ன என்பது பற்றி 200 சொற்கள் அடங்கிய ஒரு கட்டுரை எழுதுக
ii. யோவான் நற்செய்தியின் ஆசிரியர் காலம் நோக்கம் மூலங்களை தருக

4 i தூய பவுலின் வாழ்கைை பின்னணியும் அதன் மாற்றத்தையும் பிற சமய மாணவனுக்கு 200 சொற்கள் அடங்கிய ஒரு கட்டுரை ஒன்று எழுதுக

ii பவுலிடமிருந்து கிறிஸ்தவர்களுக்கு கிடைக்கும் முன்மாதிரிகைகள் 10 தருக

5 i மறைதூது பணி பற்றிய போதனையில் அடங்கும் பிரதான காரணங்கள் மூன்று தருக
ii யேசுவின் சீடர்கள் 12 வரின் பெயர்களை தருக
iii யேசு மறைத்தூதுப்பணிக்கு சீடர்களை எவ்வாறு ஆயத்தம் செய்கின்றார்
iv. சீடக்களாக அழைக்கப்பட்ட நாம் எதிர்கொள்ளும் சவால்கள் 5 தருக

20x5=100

www.ikodu.lk